// தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 209 /பேரூ/2024**
**நாள் : 30.01.2025**

திரு. V. சரவணக்குமார்,
சின்னவடவள்ளி,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், பொகலூர் வழி, சின்னவடவள்ளி, கதவு எண்.6/46 பெரியவடவள்ளி, என்ற முகவரியை சேர்ந்த திரு. V. சரவணக்குமார் என்பவரது 04.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.11.2024 அன்று பெறப்பட்டு, 209/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், பொகலூர் வழி, சின்னவடவள்ளி, கதவு எண்.6/46 பெரியவடவள்ளி, என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. V. சரவணக்குமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ள தனது 04.11.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 05.08.2024 அன்று சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட திட்ட அனுமதி எண்.112 அ.ஆ./2022 வார்டு எண்.18ல் திரு. ஜெயராமன் என்பவர் திருமண மண்டபத்தை விதிகளை மீறி கட்டியுள்ளார் எனவும், அனுமதி பெற்ற வரைபடத்தில் உள்ளவாறு கார் பார்க்கிங், பக்க திறவிடங்கள் ஏதும் விடப்படவில்லை என்றும் புகார் தெரிவித்திருந்தேன். 23.10.2024 நாளிட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் பதில் கடித குறிப்பில் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி வரி தண்டலர் நேரடி ஆய்வு மேற்கொண்டதில் மண்டபத்தின் முன் பக்கத்திலும், வலது பக்கத்திலும் 10 அடி இடம் விடப்பட்டதாகவும் மண்டபத்தின் பின்புறம் கார் பார்கிங் வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி மண்டபத்தின் இடது பக்கத்தில் உள்ள பக்க திறவிடத்தை அவர்

குறிப்பிடவில்லை. கட்டட விதிகளின்படி, நெடுஞ்சாலை எல்லையிலிருந்து கட்டடத்திற்கு 21 அடி இடைவெளி இருக்க வேண்டும். இம்மண்டபம் அமைந்திருக்கும் பகுதி தொழிற்சாலை பகுதி ஆகும். மேற்படி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கட்டட உரிமையாளரிடம் சுயலாபம் அடைந்துவிட்டார்களா என ஐயம் எழுகிறது. ஆகவே தாங்கள் ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட அலுவலா் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டி கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 18.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.12.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்: -

> மனுதாரர் புகாராக தெரிவிக்கும் மனையிடத்திற்கு மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை அலுவலகம், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் அவர்களின் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 49ன் கீழ் ந.எண்.5587/2021/உதிகு நாள் 13.04.2022 மற்றும் திட்ட அனுமதி எண்.112/அ.ஆ/2022 நாள் 13.04.2022ன்படி திரு. கே.வி.என். ஜெயராமன் என்பவருக்கு வணிகப் பயன்பாட்டிற்கு கட்டட அனுமதி நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட மனையிடத்தில் தரைத்தளம் வணிகப் பயன்பாட்டிற்கும், முதல் தளம் வணிகப் பயன்பாட்டிற்கும் திருமண மண்டபமாக கட்டியுள்ளார். மேற்படி கட்டடத்தின் பக்க திறவிடங்கள் பின்வருமாறு உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைப்படத்தில் உள்ளவாறு இடதுபுற முன்பக்கம் 10 மீட்டர் இதன் மத்தியில் 13.50 மீட்டர் மற்றும் வலது பக்கத்தில் 18 மீட்டர் இடைவெளி விட்டும் அதன் இடது புறத்தில் கோயம்புத்தூர் மாவட்ட உறுப்பினர் / செயலர் அவர்களின் திட்ட அனுமதி வரைப்படத்தில் தெரிவித்துள்ளவாறு 3 மீட்டருக்கு பதிலாக 1.20 மீட்டர் இடம் விடப்பட்டுள்ளது. கட்டட உரிமம் வழங்கும்போது திருமண மண்டபமானது வணிக பகுதியில் உள்ளடக்கியது.
>
> மேலும் வணிகம் (திருமண மண்டபம்) இரண்டு வேறு அல்ல என தெரிவிக்கப்படுகிறது. இதில் வரைப்படத்தில் சுட்டிக்காட்டியுள்ளவாறு அளவுகள் கொண்ட கார் பார்க்கிங் வசதி விடப்பட்டுள்ளது. மேலும் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான நெடுஞ்சாலையிலிருந்து கட்டட பகுதிக்குமான இடைவெளி தூரம் 10.99 மீட்டம் இடம் அமைந்துள்ளது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் . V. சரவணக்குமார் என்பவரும் மற்றும் எதிர்மனுதாரரான கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரும் 21.01.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. V. சரவணக்குமார் என்பவர் 21.01.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 20.01.2025 நாளிட்ட மனுவில் தனக்கு 4 மாதங்களுக்கு முன்பு விபத்து ஏற்பட்டதன் காரணமாக தன்னால் வர இயலவில்லை என தெரிவித்து திருமண

மண்டப கட்டட வரைபட அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது என தனது புகாரினை வலியுறுத்தியுள்ளார்.

6. எதிர்மனுதாரரான பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரான திரு. எஸ். நந்தகுமார் என்பவர் 21.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்: -

- கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18ல், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும 13.04.2022 நாளிட்ட நடவடிக்கைகளின் திட்ட அனுமதி 112 அஆ/2022ன்படி திரு. கே.வி.என். ஜெயராமன் என்பவருக்கு வணிகக் கட்டடம் கட்ட திட்ட அனுமதி வழங்கப்பட்டு, திருமண மண்டபம் கட்டியுள்ளார்.
- மனுதாரரின் புகாரான திருமண மண்டபத்தில் போதிய இடைவெளியின்றியும், வாகன நிறுத்துமிடம் இல்லாமலும் இருப்பதாக வரப்பெற்ற புகாரினை தொடர்ந்து பேரூராட்சியின் வரிதண்டலர் மேற்படி திருமண மண்டப கட்டடத்தினை நேரில் 24.12.2024 அன்று ஆய்வு மேற்கொண்டார்.
- அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைப்படத்தில் உள்ளவாறு மண்டபத்தின் இடதுபுற முன்பக்கம் 10 மீட்டர், இதன் மத்தியில் 13.50 மீட்டர் மற்றும் வலது பக்கத்தில் 18 மீட்டர் இடைவெளி விட்டும் அதன் இடது புறத்தில் திட்ட அனுமதி வரைப்படத்தில் தெரிவித்துள்ளவாறு 3 மீட்டருக்கு பதிலாக 1.20 மீட்டர் இடம் விடப்பட்டுள்ளது.
- வரைபடத்தில் தெரிவித்துள்ள அளவுகள் கொண்ட வாகன நிறுத்துமிடம் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையிலிருந்து கட்டட பகுதிக்குமான இடைவெளி தூரம் 10.99 மீட்டர் (36 அடி) இடம் அமைந்துள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, எதிர்மனுதாரர் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

கோயம்புத்தூர் மாவட்டம், சின்னவடவள்ளி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. ஆர். சரவணக்குமார் என்பவர் தனது 04.11.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில், கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18ல் திரு. ஜெயராமன் என்பவர் வரைபட அனுமதிக்கு மாறாக போதிய இடைவெளியின்றியும், வாகன நிறுத்துமிடம் இல்லாமலும் விதிமீறி திருமண மண்டபம் கட்டியுள்ளார் என புகார் தெரிவித்து, சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பெரியநாயக்கன்பாளையம் கிராமம் க.ச.எண்.381/2, 391/2எல் – தரைதளம் 6966 சதுரடி, கார்பார்க்கிங் - 2524 சதுரடி முதல்தளம் 5971 சதுரடி மற்றும் டெரஸ் ஃப்ளோர் 280 சதுரடி ஆகமொத்தம் 15741 சதுரடி பரப்பளவில் வணிகக் கட்டடம் கட்ட கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர்/இணை இயக்குநரின் திட்ட அனுமதி எண்.112/அ.ஆ/2022 நாள் 13.04.2022ல் திரு. கே.வி.என். ஜெயராமன் என்பவருக்கு உத்தேச வணிகக் கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்காணும் வரைபட திட்ட அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள் ஆணை எண்.176/2022/ஆ நாள் 07.06.2022ல் புல எண்.381/2, 391/2ல் 15,741 சதுரடி பரப்பளவில் வணிகக் கட்டடம் கட்ட கட்டட அனுமதி வழங்கப்பட்டு திருமணம் மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

மேற்காணும் திருமண மண்டபத்தில் போதிய இடைவெளியின்றியும், வாகன நிறுத்துமிடம் இல்லாமலும் மற்றும் நெடுஞ்சாலைக்கும் கட்டடத்திற்கும் போதிய தூர இடைவெளியின்றியும் இருப்பதாக மனுதாரரிடமிருந்து வரப்பெற்ற புகாரினை தொடர்ந்து, பேரூராட்சியின் வரி தண்டலர் மேற்படி திருமண மண்டப கட்டடத்தினை 24.12.2024 அன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார் என்பதையும், வரைபடத்தில் அனுமதி அளித்துள்ளபடி, மண்டபத்தின் இடதுபுற முன்பக்கம் 10 மீட்டர், மத்தியில் 13.50 மீட்டர் மற்றும் வலது பக்கத்தில் 18 மீட்டர் இடைவெளி விடப்பட்டுள்ளதையும் மேலும் வரைபடத்தில் உள்ளவாறு வாகன நிறுத்துமிடம் வசதி ஏற்படுத்தியுள்ளதையும் மற்றும் நெடுஞ்சாலையில் இருந்து கட்டடம் அமைந்துள்ள இடத்திற்கும் இடையே சுமார் 10.99 மீட்டர் (36 அடி) இடம் அமையப்பட்டுள்ளதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இருப்பினும் திருமண மண்டப கட்டடத்தின் இடது புறத்தில் வரைபட திட்ட அனுமதியில் அனுமதிக்கப்பட்ட 3 மீட்டர் இடைவெளிக்கு பதிலாக 1.20 மீட்டர் இடம் விடப்பட்டுள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாகவும் அறிய வருகிறது. இதன்மூலம் வரைபட அனுமதிக்கு மாறாக கட்டடத்திற்கு இடப்புறத்தில் குறைவான இடைவெளி விடப்பட்டுள்ளதை தெளிவாக அறியமுடிகிறது.

திருமண மண்டப கட்டுமானப் பணிகள் நடைபெறும்போதே பேரூராட்சியின் கள ஆய்வாளர்களால் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டிருப்பின் இவ்வாறு வரைபட அனுமதிக்கு மாறாக ஏற்படுத்தியுள்ள கட்டுமானத்தை தடுத்திருக்கலாம். இதன்மூலம் பேரூராட்சியின் களப் பணியாளர்கள், செயல் அலுவலர் ஆகியோர் தங்களது பணியில் அலட்சியத்துடனும் மெத்தனத்துடனும் நடந்துகொண்டுள்ள செயலினை காட்டுகிறது. எனவே இதற்கு காரணமான பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 30 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. V. சரவணக்குமார்,
   6/46 பெரிய வடவள்ளி,
   சின்னவடவள்ளி அஞ்சல்
   பொகலூர் வழி –641697
   கோயம்புத்தூர் மாவட்டம்

2. செயல் அலுவலர்,
   பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
   கோயம்புத்தூர் மாவட்டம்.
.3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28
4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (மு.கூ.பொ.).

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032